22.01.2024

அ.வ.எண். 1071-2017 மற்றும் 160-2021 & 8-2021

வாசா.1 - வசந்தி

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வா.சா.ஆ.26 இறப்புச் சான்றிதழ் வாங்குவதற்கு முன்பு கட்டணம் செலுத்தியதற்கான ரசீது என் வசம் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.26 உண்மைத்தன்மையை நிரூபணம் செய்ய என்னால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியுமா என்றால் முடியாது. எனவே வா.சா.ஆ.26 ல் உண்மை தன்மை பொறுத்து என்னால் உறுதியாக சொல்ல முடியாது. வா.சா.ஆ.26 இந்த வழக்கிற்காக என்னுடைய குடும்ப நபர்கள் மற்றும் என்னால் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ன் அடிப்படையில் எனது மாமனாரின் தகப்பனார் மாரப்ப கவுண்டருக்கு மொத்தம் 4 ஏக்கர் பாத்தியம் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ன் அடிப்படையில் எனது மாமனாரின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட 4 ஏக்கர் நிலத்தை இன்று வரை எங்கள் கைவசம் வைத்துள்ளோமா என்றால் இல்லை, 3 ஆவணங்களின் அடிப்படையில் எங்களுக்கு கிடைத்த 8 ஏக்கர் நிலத்தில் 4 ஏக்கர் விற்பனை செய்துள்ளோம், அது வா.சா.ஆ.2 மற்றும் 3 ல் கட்டுப்பட்ட நிலமா என்று எனக்கு சரியாக தெரியவில்லை. வா.சா.ஆ.2 முதல் 4 வரையிலான ஆவணங்களில் உள்ள சரத்துகளை நன்கு தெரிந்துகொண்டு தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வா.சா.ஆ.4 ல் பெரியா கவுண்டரின் மகன் மாரப்ப கவுண்டர் என்றுதான் உள்ளது.

வா.சா.ஆ.4 சக்கரைத்தேவன் என்பவரிடம் இருந்துதான் கிரயம் பெறப்பட்டது. வா.சா.ஆ.4 சவுரி முத்து தேவர் வகையறா தான் எழுதிக்கொடுத்துள்ளனர் என்றால் அவர்களும் சக்கரைத்தேவர் வகையறா தான் அவர்கள் இருவரும் சகோதரர்கள். சவுரி முத்து வகையறா வாங்கிய கடனை அடைப்பதற்காக கிரயம் கொடுக்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. கிரயத் தொகை எவ்வளவு என்று எனக்கு சரியாக தெரியாது. யாரிடம் கடன் வாங்கினார் என்று

எனக்கு தெரியாது. இந்த ஆவணத்தை பற்றிய மற்ற விவரங்களும் முழுதாக எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 ல் உள்ள மாரப்ப கவுண்டர் பெரியா கவுண்டரின் இளைய தாரத்து மகன் மாரப்ப கவுண்டர் என்றும் எனது மாமனாரின் தகப்பனார் மாரப்ப கவுண்டர் இல்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.2 மற்றும் 3ல் பெ.மாரப்ப கவுண்டர் என்றும் பெரிய மாரப்ப கவுண்டர் என்றும் தனியாக அடையாளமிட்டு நான் சொல்லி உள்ளது போல் வா.சா.ஆ.4 ல் சொல்லவில்லை என்றும் அதை குறிப்பிட்டுள்ள மாரப்ப கவுண்டர், இளைய தாரத்து மகன் மாரப்ப கவுண்டர் என்பதால் தான் அவ்வாறு அடையாளம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி இளைய தாரத்தது மாரப்ப கவுண்டர் 1951 ல் இறந்து விட்டார் என்றால் சரியல்ல, அப்படி ஒரு நபரே இல்லை. வா.சா.ஆ.2 மற்றும் 3ல் மற்றொரு பாகஸ்தரான ராக்கிய கவுண்டர் அவரது 4 ஏக்கர் நிலத்தை ஒரு முத்துக்கவுண்டருக்கு விற்பனை செய்துள்ளார். அவர் எந்த ஆவணத்தின் மூலம் விற்பனை செய்தார் என்று எனக்கு தெரியாது.

ராக்கிய கவுண்டர், கோப்பன்ன கவுண்டருக்கு தான் கிரயம் கொடுத்தார், நான் முத்துக் கவுண்டருக்கு கிரயம் கொடுத்ததாக தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முத்துக் கவுண்டர் தாவா புல எண்ணின் படி 8 ஏக்கர் பாத்தியம். என்னிடம் காட்டப்படும் ஆவண எண்.947/1936 தவறான ஆவணம். 816/1934 ஆவணத்தின் படி முத்துக்கவுண்டர் 8 ஏக்கர் நிலத்தை கோப்பண்ண கவுண்டர், ராக்கிய கவுண்டரிடம் இருந்து கிரயம் பெற்றார் என்றால் சரிதான். ஆவண எண்.947/1936 ஆவணம் செல்லாது என் எனது வழக்கில் எந்த பரிகாரமும் கேட்கவில்லை. தற்பொழுது சுமார் 4 வருடமாக வழக்கு சொத்து காலியாக உள்ளது.

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2014 முதல் கடந்த 5 வருடத்திற்கு முன்பு வரை வழக்கு சொத்திற்கு அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா பிரதிவாதிகள் பெயரில் மாறிவிட்டதால் அடங்கல் தாக்கல் செய்ய முடியவில்லை. பிரதிவாதிகள் தான் உண்மையான உரிமையாளர்

என அவர்கள் பெயரில் பட்டா தாக்கல் ஆகியுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 குற்ற வழக்கில் தற்போதைய நிலை என்ன என்று எனக்கு தெரியாது, நான் சொல்வது தவறு என்றும் மேற்படி முதல் தகவல் அறிக்கைக்கு பின்பு விசாரணையில் பொய் வழக்கு என்று தெரிந்ததால் மேற்படி வழக்கு காவல் துறையினரால் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.6 தீர்ப்பில் இளைய தாரத்து மகன் மாரப்ப கவுண்டரின் வா.சா.ஆ.4 ன் கீழ் பாத்தியப்பட்ட 4 ஏக்கர் நிலத்தை அபகரிக்கவே எனது கணவர் எங்களது குடும்பத்துடன் சேர்ந்து மோசடியாக ஒரு தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 தீர்ப்பில் கண்டுள்ள சொத்து உண்மையான இளைய தாரத்து மகன் மாரப்ப கவுண்டரின் வாரிசுகளை சேர்க்காமல் பெறப்பட்டதால் அதன் அடிப்படையில் மோசடியான தீர்ப்பு மற்றும் அவர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள அசல் வழக்கு 2012 ல் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்த 45 நாட்களில் சமரச நீதிமன்றத்தில் இந்த வழக்கு சமரசமாக முடிக்கப்பட்டது என்றால் சரிதான்.

அந்த வழக்கு சொத்து எங்களுக்கு பாத்தியம் இல்லாததால் தான் அவசர அவசரமாக வழக்கை சமரசமாக முடித்து கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 மற்றும் 7 தீர்ப்பு வா.சா.ஆ.4 ன் மூலம் பெரியா கவுண்டரின் மகன் இளைய தாரத்து மாரப்ப கவுண்டரின் வாரிசுகளுக்கு கிடைத்த உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 2021 ல் வா.சா.ஆ.8 ன் கீழ் அனுப்பிய அறிவிப்பு அனைத்தும் பிரதிவாதிகளை அச்சுறுத்துவதற்காக அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 2012 ல் வா.சா.ஆ.6 ல் ஏற்பட்ட தீர்ப்பாணை செல்லாது என இந்த பிரதிவாதிகள் என் மீது இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.39/2023 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது எனக்கு தெரியும்.

மேற்படி வழக்கு பற்றி என்னுடைய சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அந்த வழக்கு சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்த பின்னிட்டு தான்

பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டது. வா.சா.ஆ.9 அறிவிப்பும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர்கள் அனுபவிக்க கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் அச்சுறுத்தும் விதத்தில் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் பட்டா எண்.959. வா.சா.ஆ.10 ல் பட்டா எண்.959 இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 அ-பதிவேடு 16 ஏக்கருக்கு கூட்டாக வழங்கப்பட்டது என்றால் ஆமாம்.

எனது மாமனாருக்கு பாத்தியப்பட்டதாக நான் குறிப்பிடும் 8 ஏக்கர் என்று தனியாக எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.12 அடங்கலும் ராமசாமி வகையறா என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த அடங்கல் 1421 பசளிக்கு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். இந்த அடங்கல் வழங்கப்பட்ட காலத்தில் நாங்கள் விவசாயம் செய்து கொண்டு தான் இருந்தோம். வா.சா.ஆ.12 ல் என்ன விவசாயம் செய்யப்பட்டது என்ற காலத்தில் என்ன பயிரிடப்பட்டது என்று குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் சூலூர் வட்டாட்சியர் அலுவலக உபயோகத்திற்கு மட்டும் என மேற்குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

வா.சா.ஆ.13 புகார் யார் பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் ஆவணத்தை பார்த்துவிட்டு சாட்சி சரியாக புரியவில்லை, பின்பு சண்முகம் அக்கா தம்பி என எழுதியுள்ளதாக குறிப்பிடுகிறார். வா.சா.ஆ.13 க்கு குற்றவியல் நீதிமன்றத்தில் காவல் துறையினர் மூலம் மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை, எனவே இந்த வழக்கை நான் தாக்கல் செய்துவிட்டேன். நான் சொல்வது தவறு என்றும் எங்களுடைய புகாரில் முகாந்திரம் இல்லாததால் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 பட்டா பாஸ் புத்தகம் மொத்தம் 16 ஏக்கருக்கு வழங்கப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல, பட்டா எண்.959 ல் 8 ஏக்கருக்கு தனியாக கொடுக்கப்பட்டுள்ளது.

வழக்கு சொத்து தவிர இதர சொத்துக்களும் எனது மாமனாருக்கு

பாத்தியப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.14 ஒரே நாளில் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. எனது மாமனாரின் இதர சொத்துக்களுக்கு 2003 ல் பட்டா கொடுக்கப்பட்டதாகவும் வழக்கு சொத்திற்கு 2006 பட்டா கொடுக்கப்பட்டதாகவும் கையெழுத்து செய்யப்பட்டது என்றால் ஆமாம். அதேபோல் தாவா சொத்து அல்லாத வேறு சொத்துக்கள் எனது மாமனாருக்கு எப்படி பாத்தியம் என்று மூல ஆவணங்கள் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம், ஆனால் 2 பக்கத்தில் வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட இடத்தில் மூல ஆவணங்கள் குறித்து எழுதப்படவில்லை என்றால் ஆமாம்.

வழக்கு சொத்து குறித்து எழுதப்பட்டது சம்மந்தமாக வா.சா.ஆ.14 ல் பின்புறம் தாசில்தார் மேலோப்பம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனது மாமனாருக்கு வேறு சொத்துக்கள் சம்மமந்தமாக கொடுக்கப்ட்ட பட்டா பாஸ் புத்தகத்தை வழக்கு சொத்தை அபகரிக்க அந்த சொத்துக்களை பற்றியும் விவரங்களை சேர்த்து பொய்யான ஆவணத்தை உருவாக்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாசில்தாரிடம் பட்டா ரத்து செய்வதற்கு மனு கொடுத்திருந்தோம் என்றால் ஆமாம். மேற்படி மனு சக்திகுமார் மீது தனியாகவும், சண்முகம் வகையறா மீது தனியாகவும் கொடுத்தோம் அதில் சக்திகுமார், தனபால் பெயரில் உள்ள பட்டாவை விசாரணை அடிப்படையில் ரத்து செய்தனர்.

சக்திகுமார், தனபால் மேற்படி மாரப்ப கவுண்டர், பெரியா கவுண்டரின் இளைய தாரத்து மகன் என தான் எதிர் கட்சி செய்தனர். சிவில் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் வருவாய் நீதிமன்றத்தில் மேற்கொண்டு வழக்கு நடத்த கூடாது என ஆட்சேபனை தெரிவித்தார்கள் என்றால் ஆமாம். அதேபோல் உயர்நீதிமன்றத்தின் ஒரு உத்தரவு பெறப்பட்டது என்றால் ஆமாம். அதில் இருதரப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்பி விசாரணை மேற்கொண்டு சட்டப்படி உத்தரவிடப்பட்டிருந்தது. அப்பொழுது விசாரணை நிலுவையில் தனபால்

இறந்துவிட்டார் என்றால் சரியல்ல, விசாரணை முடிந்த பின்னிட்டு தான் தனபால் இறந்தார். ஆனால் உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்பாகவே இறந்துவிட்டார். தனபாலின் வாரிசுகளை வருவாய் நீதிமன்றத்தில் தரப்பினராக சேர்க்க மனு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முறையாக விசாரணை செய்யாமல் சரியான தரப்பினர்களை சேர்க்காமல் அளித்த உத்தரவு தவறானது என்றால் சரியல்ல. அந்த ஆர்.டி.ஓ உத்தரவை எதிர்த்து சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.16 ல் புகாரின் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வா.சா.ஆ.18 முதல் 20 வரையிலான ஆவணங்கள் அரசு அதிகாரிகளை அச்சுறுத்தும் நோக்கத்துடன் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.24 ல் நான் நகல் கேட்டு தாக்கல் செய்த மனுவில் அசல் ஆவணங்கள் இல்லை என்று எங்களது நகல் மனு திருப்பப்பட்டது. அதற்கு மேல் மேற்படி அசல் ஆவணங்களை பெற நான் முயற்சி செய்தேனா என்றால் மேற்படி அசல் ஆவணங்கள் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றுதான் எனது நகல் மனு திருப்பப்பட்டது.

பெரியா கவுண்டரின் இளைய தாரத்து மகன் மாரப்ப கவுண்டருக்கு ஒரு மாரப்ப கவுண்டர் என மகன் இருக்கிறான் என்றால், அப்படி இளைய தாரமே அவருக்கு இல்லை. மேற்படி மாரப்ப கவுண்டர் வா.சா.ஆ.4 ல் கீழ் 4 ஏக்கர் பாத்தியப்பட்டு அவர் ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் தன்னுடைய மகன் மாரப்ப கவுண்டரை வாரிசாக வைத்துவிட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. அந்த மாரப்ப கவுண்டருக்கு தான் பழனியம்மாள், ராக்கியப்பன், ரங்கசாமி, கந்தசாமி, லட்சுமி, ஆறுச்சாமி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரியல்ல. மேற்படி பெரியா கவுண்டரின் இளைய தாரத்து மகன் மாரப்ப கவுண்டரின் வாரிசுகள் தான் மேற்படி நபர்கள் என்று நன்கு தெரிந்தும் தற்பொழுது தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி மகன் மாரப்ப கவுண்டர் அவருடைய ஒரு மகன் வழி பேரன்

தனபாலிற்கும் மற்றொரு மகன்களின் பேரன் சக்திகுமாருக்கும் வா.சா.ஆ.4 ன் கீழ் கிடைத்த 4 ஏக்கரை உயில் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி மகன் மாரப்ப கவுண்டர் 1997 ம் ஆண்டு இறந்த பின்பு உயில் சாசனம் நடைமுறைக்கு வந்து சக்திகுமார் மற்றும் தனபால் மேற்படி 4 ஏக்கர் நிலத்தை அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சக்திகுமார் மற்றும் தனபால் இடையே 4 ஏக்கர் நிலத்தை அனுபவிப்பதில் பிரச்சனை ஏற்பட்டதால் அ.வ.எண்.379/2016 தாக்கல் செய்து பின்பு சமரசமாக தீர்ப்பாணை பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

மேற்படி தீர்பாணையின் அடிப்படையில் தான் சக்திகுமாரும், தனபாலும் 4 ஏக்கர் நிலத்தை பட்டா மாற்றம் செய்து கொண்டனர் என்றால் சரியல்ல. வா.சா.அ.2 மற்றும் வா.சா.ஆ.3 ன் கீழ் 616 நம்பர் காலையில் 4 ஏக்கர் நிலம் மட்டும் தான் எங்களுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. நீதிமன்ற தீர்ப்பின் மூலம் மாற்றப்பட்ட பட்டாவை தான் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவின் கீழ் நாங்கள் மாற்றியுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. நீதமன்றத் தீர்ப்பின் மூலம் 4 ஏக்கர் தனபால் சக்திகுமாருக்கு பாத்தியம் என்பதால் தான் அவர்கள் ரஞ்சத் என்பவருக்கு ஒரு கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அ.வ.எண்.1071/2017 வழக்கில் உள்ள சொத்து வேறு நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும் 614 காலையில் இனிமேல் எங்களுக்கு நிலம் பாத்தியம் இல்லை என்பதால் அந்த வழக்கில் நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

எனவே அ.வ.எண்.8/21 ல் சக்திகுமார், தனபால் பெற்ற தீர்ப்பு செல்லாது என பரிகாரம் கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.379/2016 ல் உள்ள வழக்கு சொத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்பதால் அவ்வழக்கில் நாங்கள் அவசியம் அற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. எனவே அ.வ.எண்.160/2021 வழக்கு அ.வ.எண்.8/2021 மற்றும் அ.வ.எண்.1071/2017 வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால்

சரியல்ல. அ.வ.எண்.108/2005 என்ற வழக்கு எனது மாமனார் ராமசாமி பெரியா கவுண்டருக்கு இரண்டு மனைவிகள் இருப்பதை ஒப்புக்கொண்டு வழக்கு தாக்கல் செய்திருந்த நிலையில் அதை இந்த வழக்கிற்காக வேண்டுமென்றே மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ரஞ்சித்குமாருக்கு சக்திகுமார் மற்றும் தனபாலுக்கு ஏற்படுத்திக் கொடுத்த ஆவணம் சட்டப்படியான ஆவணம் என்றும் அதை கேள்வி எழுப்ப எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் உரிமையை பொறுத்து பரிகாரம் கேட்டுள்ளதால் வழக்கில் குறைவாக மதிப்பிட்டு முத்திரைக்கட்டணம் செலுத்தி உள்ளேன் என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. சக்திகுமார் மற்றும் தனபாலுக்கு வழக்கு சொத்தை பொறுத்து அனைத்து விதமான வில்லங்கம் ஏற்படுத்த அனைத்து விதமான உரிமை உண்டு என்றால் சரியல்ல. எனது மாமனார் அப்பா பெயர் பெரியா மாரப்பன் என்கிற மாரப்பன். அதை நிரூபிக்கும் வகையில் நான் வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனவே எனது வழக்கு முழுவதுமாக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.
மறுவிசாரணை இல்லை.

Sd/வசந்தி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected

N RENUGA Digitally signed by N RENUGA Date: 2024.01.23 18:16:02 +0530

District Munsif
Sulur